**தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவை – 2018**

---------------------------------------------------------------------------------------------

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் (பேரவை) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்தல் பேரவையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஒழுங்குபடுத்தல் பேரவையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஒழுங்குபடுத்தல் பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஒழுங்குபடுத்தல் பேரவை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ

செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும்

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஒழுங்குபடுத்தல் பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் ஒழுங்குபடுத்தல் பேரவை இணங்கியிருந்ததா என்பதும்,

- ஒழுங்குபடுத்தல் பேரவைய அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- ஒழுங்குபடுத்தல் பேரவையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 | | |
| (i) நியமத்தின் 132 ஆம் பந்தியின் பிரகாரம், குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் திருத்தப்படும். | நிதிக்கூற்றுக்களை புரிந்து கொள்வது தொடர்பில் பயன்படுத்தப்பட்ட ஏனைய கணக்கீட்டுக் ரொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏதேனும் அளவீடுகள் இருந்தால் அவற்றை வெளிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (ii) | நியமத்தின் 108 ஆம் பந்தியின் பிரகாரம், தொடர்புடைய நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு பொருத்தமானது என தெளிவுபடுத்தப்பட்ட மொத்த வருமானத்தின் துணை தெளிவுபடுத்தலானது நிதி செயலாற்றுகை கூற்றின் முகப்பில் முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டு காலப்பகுதியில் பதிவு கட்டணமாக பெறப்பட்ட வருமானம் ரூபா 26,095,000 தெளிவுபடுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்கான பதிவு கட்டணங்கள் தொடர்பான விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும், மருத்துவ நிறுவனங்கள் மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகளை பதிவு செய்வதற்காக கணனி முறைமை ஒன்று தயாராகி வருகிறது மற்றும் மேலும் சில மாதங்களில் அந்த நடவடிக்கைகள் நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. | மொத்த வருமானத்தின் துணை தெளிவுபடுத்தலானது நிதி செயலாற்றுகை அல்லது அதிலுள்ள குறிப்புக்களின் முன் வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் தளபாடம் மற்றும் பொருத்துதல்கள், அலுவலக உபகரணங்கள், கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் உள்ளடங்கலான அனைத்து நடைமுறை அல்லா சொத்துக்களுக்கு 5 சதவீதப்படி பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன், நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலம் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர்காலத்தில் தேடுதல் செய்து நடவடிக்கைகள் எடுக்க எதிர்பார்க்கப் படுகிறது. | நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுட்காலத்தை ஆண்டு தோறும் மதிப்பாய்வு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவுக்கட்டணங்களின் வருமானம் காசு அடிப்படையில் கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்காக ஒரு கணனி முறைமையொன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன் எதிர்வருகின்ற சில மாதங்களுக்குள் அந்த பிரச்சினைகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. | வருமானம் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு கணக்குகளில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்பின் ரூபா 949,785 தொகையான பெறவேண்டிய வட்டி ,ரூபா 44,253 தொகையான செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் ரூபா 11,063 தொகைய செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதி என்பன கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலையான கணக்கு தொடர்பான வருமானம் வங்கியில் இடப்பட்டு இருந்தது. | பெறவேண்டிய வருமானங்களையும் செலுத்த வேண்டிய செலவுகளையும் அங்கீகரித்து அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி கணக்கிணக்க கூற்றை சமப்படுத்தும் பொருட்டு காசு மீதியுடன் ரூபா 309,000 மற்றும் ரூபா 53,115 தொகையொன்று முறையே சேர்க்கப்பட்டும் கழிக்கப்பட்டும் இருந்தன. | இந்த விடயம் தொடர்பாக தேடுதல் செய்து அறிக்கையிட எதிர்பார்க்கப்படுகிறது. | மாதாந்த வங்கிக் கணக்கிணக்க கூற்றை துல்லியமாக தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.4 தொங்கல் கணக்குகள்

| விடயம் | தொகை | தொங்கல் உள்ள காலப்பகுதி | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| நிதி பரிமாற்றல் கணக்கு (Fund Transfer Account) | 232,400 | 3 வருடங்கள் | இது ஒரு 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கணக்கீட்டு வழு ஆகும். | நிதி பரிமாற்றல் கணக்கின் மீதியை அடையாளம் கண்டு, தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 31,319,012 தொகை நிலையான வைப்புக்களிலும், ரூபா 10,000,000 தொகை திறைசேரி உண்டியல்களிலும் | நிலையான வைப்புக்களிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்வதற்கான அங்கீகாரம் பேரவையின் மாதாந்த கூட்டத்திலிருந்து பெறப்பட்டது. | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்கு பொறுப்பான அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரம் பெறப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒழுங்கடுத்தல் பேவையால் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | | பின்னரே முதலீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க ஓய்வூதிய பணிக்கொடை செலுத்துகை சட்டம் | ஒழுங்குபடுத்துதல் பேரவையின் 09 உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் ஓய்வூதிய பணிக்கொடை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பொருத்தமான முறைமை தற்போது தயாரிக்கப்பட்டிருக்க வில்லை மற்றும் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு எதிர்பார்க்கப் படுகிறது. | ஒழுங்குபடுத்தல் பேரவையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சட்டத்தின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1465/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். | ரூபா 25,000 ற்கு அதிகமான தொகையை செலுத்தும் சந்தர்ப்பங்களின் பற்றுச்சீட்டுக்களுக்கு ரூபா 25 முத்திரை தீர்வையை வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | தற்போது இது தொடர்பாக பொருத்தமான முறைமையொன்று தயாரிக்கப் படவில்லை மற்றும் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுப்பதற்கு எதிர்பார்க்கப் படுகிறது. | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1465/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

(ஈ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

-----------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணங்கள் 137, 139 மற்றும் 262(2) | 306 உறுதிச்சீட்டுக்களால் ரூபா 20,589,946 தொகை கொடுப்பனவு செய்யப்படுகின்ற போது; கொடுப்பனவை சான்றுப்படுத்தல் மாத்திரமே இடம்பெற்றிருந்ததுடன் கொடுப்பனவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கு கையொப்பம் வைத்தல் அல்லது கொடுப்பனவை அங்கீகாரம் செய்தல் என்பவற்றிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ''கொடுப்பனவு செய்யப்பட்டது'' என்ற முத்திரையும் இடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 225(4) | 06 உறுதிச்சீட்டுக்களால், ரூபா 172,900 தொகை கொடுப்பனவு செய்யப்படுகின்ற போது; உறுதிச்சீட்டுக்களை தயாரிக்கின்ற அல்லது திருத்தங்களை செய்கின்ற உத்தியோகத்தர்கள் | எதிர்காலத்தில் சரிசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவர்களின் குறுகிய கையொப்பங்களை வைத்திருக்கவில்லை. | | |
| (iii) நிதிப் பிரமாணங்கள் 431(3) | விலைகூறப்பட்ட பெறுமதி, கொள்வனவு பெறுமதி, விற்பனையில் இருந்தான வருமானம், இலாபம் அல்லது நட்ட பெறுபேறுகள், பங்கிலாபம், பங்குலாபம் கிடைத்த திகதி முதலியனவற்றை உள்ளடக்குகின்ற ஒரு முதலீட்டு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஒரு முதலீட்டு பதிவேட்டை பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் ஒரு முதலீட்டு பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆம் திருத்திய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான சொத்துக்களின் கிரயம் ரூபா 1,848,956 தொடர்பில் நிலையான சொத்து பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்து பதிவேடு ஒன்றினை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலையான சொத்து பதிவேடு ஒன்று தயாரிக்கப்படுவதுடன் இது அண்மித்த திகதி வரைக்கும் பேணப்பட வேண்டும். |
| (உ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணனி மற்றும் மென்பொருளின் கிரயம் ரூபா 3,102,640 தொடர்பில் நிலையான சொத்து பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | கணனி மற்றும் மென்பொருட்களுக்கான பதிவேடு ஏற்கனவே பேணப்பட்டு வருகின்றது. | ஏற்கனவே பேணப்பட்டு வந்த பதிவேடு நாளதுவரையாக்கப்படவில்லை. மற்றும் அது அண்மித்த திகதி வரைக்கும் பேணப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 6,167,170 பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,466,375 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,700,795 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 5,252,992 தொகையான வருமானம் அதிகரித்து காணப்பட்டு இருந்த போதிலும், ரூபா 5,896,888 ஆல் அதிகரித்த நிர்வாக செலவு மற்றும் ஊழியர்களின் சம்பள கட்டமைப்பை மாற்றியமைத்தல்கள் மீதான ரூபா 2,186,772 ஆல் அதிகரித்த ஊழியர்களின் சம்பளங்கள் என்பன இந்த வீழ்ச்சிக்கு முக்கியமாக தாக்கம் செலுத்தியிருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் முன்னேற்ற பகுப்பாய்வு

மீளாய்வாண்டிற்கான பதிவு கட்டணங்களின் வருமானம் ரூபா 26,095,000 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டிற்கான அந்த வருமானம் ரூபா 21,944,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது மீளாய்வாண்டிற்கான விசேட பதிவுக் கட்டணங்களின் வருமானம் ரூபா 4,151,000 ஆல் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடம் இருந்து தகவல்களை பெறுவதன் மூலம் தேவையான பணியாளர்களை மதிப்பீடு செய்யும் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஏனெனில் அவர்கள் அதிகாரபூர்வமாக சபையின் உறுப்பினர்கள் ஆவார்கள், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் இருந்து அறிவுறுத்தல்களை பெறுவதன் | சபையின் தீர்மானத்தின் பிரகாரம், நிறுவனத்தின் பங்கை அடையாளம் கண்ட பின்னர், அவைகளுடன் பொருத்தக்கூடிய வகையில் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டது. | சிக்கனமற்ற செலவுகள் தவிர்க்கப்பட வேண்டும். |

மூலம் சம்பள அளவீடுகளை தயாரிப்பதற்கான வாய்ப்புக் காணப்பட்டது. அதற்குப் பதிலாக, ஒழுங்குபடுத்தல் பேரவைக்கு தேவையான பணியாளர்களை மதிப்பீடு செய்தல் மற்றும் சம்பள அளவீடுகளை தயாரித்தல் என்பன ஆலோசனை கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்ததுடன் ரூபா 320,300 தொகை கட்டணங்களாக செலுத்தப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒழுங்குபடுத்தல் பேரவையினால் சேகரிக்கப்படும் பதிவுக் கட்டணத்தில் 50 சதவீதத்தை மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கு முன்னர், தனியார் துறை அபிவிருத்தியுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை உள்ளடக்கிய வருடாந்த பாதீட்டு மதிப்பீடொன்றுடன் வருடாந்த முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கும் ஆண்டின் இறுதியில் செலவினம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கும், 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை | இந்த விடயம் தொடர்பாக தேடுதல் செய்து எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது. | 2015 யூலை 09 இல் வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 2006 இல், 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 3(5) ஆம் பிரிவினை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (பதிவு செய்யும்) சட்டத்தின் 3(5) ஆம் பிரிவினை திருத்தம் செய்வதற்கும் 2015 யூலை 09 ஆந் திகதி அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 3 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அதிகாரச்சட்டம் திருத்தம் செய்யப்படாமல் இருந்தது மற்றும் பதிவுக்கட்டண வருமானத்தில் 50 சதவீதம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | பதிவு செய்வதற்கான குறிப்பிட்ட காலப்பகுதி சட்டத்தின் அல்லது கண்காணிப்பு வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எனவே எந்தவொரு தினத்திலும் பணம் கிடைத்ததன் பின்னர் உரிய ஆண்டுக்காக பதிவுச் சான்றிதழ் வழங்குதல் இடம்பெற்றிருந்தது மற்றும் தண்டப்பணங்கள் வசூலிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ஆண்டின் தொடக்கத்தில் பேரவைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் தாமதமாக கிடைக்கப்பெற்றது. | பதிவு செய்தல் செயற்பாட்டின் குறைபாடுகள் காரணமாக பதிவு செய்தல் மற்றும் வருடாந்த புதுப்பித்தல் தாமதமாக இருந்ததுடன் இணையத்தில் நேரடியான பதிவுக்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பதிவு செய்வதற்கு தாமதமாக விண்ணப்பிக்கும் மருத்துவ நிறுவனங்களுக்கு தண்டப்பணம் விதிப்பதற்கான முன்மொழிவை பேரவைக்கு சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. | குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் பதிவு செய்யாத நிறுவனங்களிடம் இருந்து தண்டப் பணத்தை வசூலிக்கவும் தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்கான குறிப்பிட்ட காலப்பகுதியை தீர்மானிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது ரூபா 2,070,000 தொகையை ஈட்டிய ஒரு தனியார் நிறுவனத்தால் மருத்துவ மற்றும் | பேரவை மேற்கொண்டிருந்த தீர்மானத்தின் பிரகாரம் சர்வதேச ரீதியாக | வழக்கின் தீர்ப்பை பரிசிலீத்த பின்னர் தனியார் மருத்துமனைகளின் |

| | | |
|---|---|---|
| அறுவைச்சிகிச்சை நிபுணர்களின் சேவைக்கான ஒரு குறிப்பிடப்பட்ட கட்டண முறையொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அது செயற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சுகாதார போஷனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் சில ஏனைய 8 தரப்பினர்கள் அதிகபட்சமான கட்டணங்கள் பொதுவான அடிப்படையில் தயாரிக்கப்பட்டு இருந்தன என்றும், ஒவ்வொரு மருந்துவ மனைகளினதும் வேறுபட்ட தர ரீதியான காரணிகள் தனித்தனியாக கருதப்பட்டிருக்கவில்லை என்றும் குறிப்பிடப்படுகின்றனர். | ஏற்றுக்கொள்ளப்பட்ட 5 கணக்கீட்டு ஆலோசனைகளை நிறுவனங்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களை மதிப்பீடு செய்ததன் பின்னர் தகுதிவாய்ந்த வழங்குனரை தெரிவு செய்வதற்கான செயற்திட்டம் தொடங்கி இருந்ததுடன் மற்றும் செயற்திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளை பயன்படுத்தி அமைச்சரின் மேற்பார்வையின் கீழ் தயாரிக்கப்பட்ட மருத்துவமனை கட்டணங்கள் வர்த்தமானி செய்யப்பட்டன. எவ்வாறாயினும், 9 மருத்துவ மனைகள் அதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தன. | மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்களின் சேவைகளுக்காக பொதுவான நிபந்தனையில் தயாரிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டண முறையை வர்த்தமானி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------ | ---------------------- | ----------------- |
| (அ) 2006 இன் 2 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 2(1) உப பிரிவின் பிரகாரம் அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் பதிவு | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் பங்கேற்பு | பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாட்டை செயற்படுத்துவதற்கும் மற்றும் பேரவையில் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் 1387 தனியார் மருத்துவ நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் பதிவு செய்யப்பட வேண்டிய தனியார் மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கையை இனங்காண்பதற்கும், பதிவு செய்வதற்கும் மற்றும் பதிவு செய்யாத நிறுவனங்கள் தொடர்பாக சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கு முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | மற்றும் ஆலோசனையுடன் முழு தீவையும் உள்ளடக்கியதாக தனியார் மருத்துவ நிறுவனங்களின் புள்ளி விபர கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகின்றது. | பதிவு செய்யப்பட வேண்டிய மருத்துவ நிறுவனங்களை அடையாளம் காண்பதற்கும் ஒரு முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களால் பேணப்பட வேண்டிய நியமங்களை அபிவிருத்தி செய்து கண்காணிப்பு செய்தல், தற்போது பேணப்படுகின்ற தரங்களை மதிப்பீடு செய்தல், ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் குறைந்த பட்ச தகைமைகளை உறுதிப்படுத்துதல் மற்றும் | தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவு செய்வதற்கான ஆகக்குறைந்த தகைமைகள் மற்றும் நியமங்களை உள்ளடக்கியுள்ள வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதுடன், தனியார் மருத்துவ நிறுவனங்ககளின் தரத்தை மதிப்பீடு செய்ததன் பின்னரே ஒவ்வொரு | ஒழுங்குபடுத்தல் பேரவை தொடங்கப்பட்டு 13 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகளை நிறைவு செய்ய தவறிவிட்டது. ஆகையினால் இந்த விடயம் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களுடைய பயிற்சியுடன் நோயாளிகளை பேணும் சேவைகளின் தரத்தை உறுதிப்படுத்துதல் என்பன தொடர்பில் முறையான நடைமுறையொன்றை தயாரித்து செயற்படுத்துவதற்கு இது தவறியது. | மாகாணத்தினதும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளரினால் அல்லது தகுதி வாய்ந்த உத்தியோகத்தர்களை கொண்ட சபையினால் பதிவு செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்படுகிறது மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்களின் ஊழியர்களின் தகைமைகள் கண்காணிப்பு செய்யப்படுவதுடன் குறிப்பிடப்பட்ட ஊழியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் பேரவையினால் நடாத்தப்படுகின்றன. | சிறப்பு கவனம் செலுத்தி வழிகாட்டுதலை நெறிமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிலையங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் பிரகாரம் 13(1) பிரிவின் பிரகாரம், தனியார் மருத்துவ நிறுவனங்களின் அங்கீகாரத்திற்கான முறையான முன்மொழிவொன்றை தயாரிக்கவும், பேரவையின் அறிவுறுத்தல்களின் பேரில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒரு ஒழுங்குமுறை மூலம் அதை செயற்படுத்தவும் அமைச்சரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடிய பின்னர் இந்த விடயம் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தனியார் மருத்து நிறுவனங்களின் அங்கீகாரத்திற்கான முறையான முன்மொழிவொன்றை தயாரிக்கவும் அதை செயல்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிலையங்களை (பதிவு செய்யும்) சட்டத்தின் 18(2)உப பிரிவின் (எ) பந்தியின் பிரகாரம், தனியார் மருத்துவ நிறுவனம் ஒன்றிற்கு அல்லது அதனுடன் தொடர்புடைய ஏதேனும் நபருக்கு எதிராக தொடர்புபடும் நபர் அல்லது அதிருப்திக்குட்பட்ட நபரொருவரால் செய்யப்பட்ட முறைப்பாடொன்று, பொறுப்பேற்கப்படுகின்ற போதும் அல்லது இறுதியாக முடிவுறுத்தும் போதும், பின்பற்றப்பட வேண்டிய பயிற்சி நடைமுறைகள் அல்லது நடைமுறைகள் தொடர்பாக கட்டளைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பான முறையான வழிகாட்டல் ஒன்று தயாரிக்கப்பட்டதுடன் அமைச்சின் சட்டப்பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டது மற்றும் முறைப்பாடுகளை பரிசீனை செய்ய ஒரு முறைப்பாட்டு குழுவும் நியமிக்கப்பட்டது. | ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் அல்லது அதனுடன் தொடர்பான நபருக்கு எதிராக தொடர்புபடும் நபர் அல்லது அதிருப்திகுட்பட்ட நபரொருவரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை பொறுப்பேற்றுக் கொள்வதில் அல்லது இறுதியாக முடிவுறுத்தல் செய்கையில் பின்பற்றப்பட வேண்டிய பயிற்சி நடைமுறைகள் அல்லது நடைமுறைகள் மற்றும் அதனை நெறிப்படுத்தல் தொடர்பான கட்டுப்பாடுகளை தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒழுங்குபடுத்தல் பேரவையின் செயற்பாடுகளையும் அதன் விஸ்தீரணத்தையும் அடையாளம் கண்ட பின்னர் தேவையான பதவியணியினருக்கான | நிறுவனத்தின் செயற்பாடுகளை அடையாளம் கண்ட பின்னர் பதவியணியினரின் தேவைக்கு ஏற்ப | பேரவையின் செயற்பாடுகளை அடையாளம் கண்ட பின்னர், ஒழுங்குபடுத்தல் பேரவையின் செயற்பாடுகளுடன் |

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் ஒன்பது உத்தியோகத்தர்கள் பணிக்கமர்த்தப்பட்டு இருந்தனர். | பொருத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு பேரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது. | பொருந்த கூடிய வகையில் பதவியணியினர் தயாரிக்கப்பட வேண்டியதுடன் பதவியணியினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயலாளரினால் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சுக்கு வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல. என்பி/எஸ்பி/எஸ்டிஜி/17 (NP/SP/SDG/17) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக பேரவை அறிந்திருக்கவில்லை என்ற உண்மையின் காரணமாக, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவற்றின் எல்லையில் கீழான குறிக்கோள்கள் மற்றும் குறிக்கோள்களுக்கான அடைவுகள் மற்றும் அடைவுகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயம் தொடர்பாக முறையாக அறிந்திருக்கவில்லை மற்றும் இந்த விடயத்தை தேடுதல் செய்த பின்னர் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவற்றின் எல்லையின் கீழான குறிக்கோள்கள், குறிக்கோள்களுக்கான அடைவுகள் மற்றும் அவற்றை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை அடையாளம் காண்பதற்கு ஒழுங்குபடுத்தல் பேரவையால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |